பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 09 ஞாயிற்றுக்கிழமை (22-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 116

# உடனடி யுத்த நிறுத்தம் கோரி யாழ் வந்த தூதுகுழு அறிக்கை

## சிங்களக் குடியேற்றத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்க வற்புறுத்து

கொழும்பு, மார்ச் 22

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் உடனடியாக யுத்த நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தேசிய கிறிஸ்தவ சங்கம் நேற்று கொழும்பில் வெளியிட்ட அறிக்கையில் கோரியுள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் சிங்களக் குடியேற்றத்தை நிறுத்துமாறும் அரசாங்கத்திடம் கேட்கப்பட்டுள்ளது.

இச்சங்கத் தூதுக்குழுவினர் கடந்த 11ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சங்கத்தினர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

★ இனப்பிரச்சினைத் தீர்வு காண்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழு வடக்கு, கிழக்குக்கு விஜயம் செய்ய வேண்டும்.

★ அன்னியோன்னியமாகவும் புரிந்துணர்வுடனும் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டாலொழிய பிரச்சினையைத் தீர்க்க முடியாது. வடக்கிலும் கிழக்கிலும் சிங்களக் குடியேற்றத்தை

[5 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 22

வவுனியா, பேயாடிகூழாங்குளம் பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே சுமார் அரைமணி நேரம் கடும் மோதல் இடம் பெற்றது. மோதலின் முடிவில் பலத்த இழப்புகளுடன் படையினர் பின்வாங்கிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

[2 ஆம் பக்கம் பார்க்க]

## அடுத்த நடவடிக்கை வடக்கிலாம்

''இப்போது மேற்கொள்ளப்படும் மணலாறு நடவடிக்கையை வெற்றியாக நடத்தி முடித்ததும் அடுத்து படையினர் வடக்கின் மீது, தாக்குதல் நடத்துவர். இதனை எண்ணி புலிகள் அச்சமடைந்துள்ளனர்.''

—இவ்வாறு வடபகுதி இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்னா நேற்று ஒலிபரப்பு ஒன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

[உ-த]

## யாழ். ஆஸ்பத்திரிக்கு போதிய மருந்து வகைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ். போதனா வைத்தியசாலைக்கு போதிய மருந்து வகைகள் 'குமண' கப்பலில் எடுத்து வரப்படுகின்றன.

கொழும்பில் போதனா வைத்தியசாலைகள் அமைச்சு உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியபின்னர் யாழ்ப்பாணம் திரும்பியுள்ள போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி கனகரத்தினம் இத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

அவசர மருந்து வகைகளை விமான மூலம் எடுத்து வந்து, காங்கேசன்துறை - கீரிமலை பாதையூடாக வாகனம் மூலம் கொண்டு வருவதற்குக் கொழும்பில் நடந்த பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டதாகவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

யுத்தம் தொடங்கியபின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் சகல மருந்து வகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவி வருவது தெரிந்ததே.

[அ-3]

## சிங்கள ராணுவம் தமிழரை அழிப்பதற்கு அனுமதிப்பதா?

### சட்டசபையில் பண்ருட்டி ஆக்ரோஷம்

''இலங்கைத் தமிழர்களை சிங்கள இராணுவம் அழிப்பதை நாம் அனுமதிக்கலாமா?''

பாட்டாளி மக்கள் கட்சியின் உறுப்பினரான பண்ருட்டி இராமச்சந்திரன் நேற்று சட்டசபையில் இவ்வாறு ஆக்ரோஷத்துடன் கேள்வி எழுப்பினார்.

ராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்குத் தண்டனை அளிக்கலாம். அதற்காக தமிழர்களை அழிப்பதற்கு அனுமதிக்க முடியுமா என்றும் அவர் கேட்டார்.

''இலங்கைத் தமிழர்களுக்கு ஓர் ஆபத்தான நிலை உருவாகி இருக்கிறது'' என்றும் அவர் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா —

''இலங்கைத் தமிழர் நலனில் உறுப்பினரை விட எமக்கு அதிக அக்கறையுண்டு.

[5 ஆம் பக்கம் பார்க்க]

## வெப்பம் அதிகம்: நாய்கள் குறித்துக் கவனம்! விசர் நோய் ஆபத்து உண்டு!!

வழமையை விட இம்முறை வெப்பம் அதிகரித்திருப்பதால் நாய்களுக்கு விசர் நோய் பிடிக்கும் ஆபத்து அதிகம் உண்டு. கட்டாக்காலி நாய்கள் குறித்து அனைவரும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாநகரப் பகுதியில் இதுவரை சுமார் மூவாயிரத்து 300 வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. அத்துடன் அவற்றுக்கு அனுமதித் தகடுகளும் [லைசென்ஸும்] வழங்கப்படுகின்றன,

பட்டி மற்றும் தகடு இன்றிக் காணப்படும் நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கைகளும் தற்சமயம் முடுக்கி விடப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் சொன்னார்.

[ஒ-5]

## தினமும் 400 மெற்றிக் தொன் உணவு இறக்கப்படுகிறது

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து வேலை நாட்களில் தினமும் சராசரியாக 400 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் இறக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் 200 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களே இறக்கப்பட்டு வந்தன.

தற்சமயம் காலநிலை சீராக இருப்பதாலும், நான்கு இழுவைப் படகுகள் சேவையில் ஈடுபட்டுள்ளதாலும் — தினமும் 400 மெற்றிக் தொன்னுக்கு மேல் பொருள்களை இறக்கக் கூடியதாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது

[இ-3]

## வல்வையை நோக்கி பீரங்கி தாக்குதல்

பருத்தித்துறை, மார்ச் 22

வல்வெட்டித்துறைப் பகுதியை நோக்கி நேற்று அதிகாலை 4-45 மணியளவில் கடற்பரப்பில் இருந்து பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

அதேசமயம் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை நோக்கியும் விசைப் படகுகளில் வந்த கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். கட்டுமரத்தில் சென்ற பலர் மரங்களை விட்டுவிட்டு நீந்திக் கரைசேர்ந்தனர். அச்சமயம் சுந்தரலிங்கம் மெய்யழகன் [வயது 18 - ஆதிகோவிலடி] என்பவர் துப்பாக்கி வேட்டுக்கு இலக்கானார்.

[ஒ-118-165]

## முச்சந்தி முரளி



# மணலாறில் 5ஆம் நாளாக கடும் சமர் தொடர்கிறது!

யாழ்ப்பாணம், மார்ச் 22

மணலாறுப் பகுதியில் கடந்த செவ்வாயன்று ஆரம்பமான பெரும் போர் நேற்று ஐந்தாவது நாளாகத் தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

பல ஆயிரக்கணக்கான படையினருடன் விடுதலைப் புலிகள் வீரர்கள் தமிழ் மண்ணின் எல்லைப்புறத்தில் போரிட்டு வருகின்றனர். விமானப் படையினரின் கண்மூடித்தனமான குண்டுவீச்சின் மத்தியிலும் களத்தில் அவர்கள் சளைக்காது சண்டையிட்டு வருகின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்காப் படையினர் தரை, கடல், ஆகாய மார்க்கமாக இலக்கின்றி, கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றும் குண்டுவீச்சு விமானங்கள் கண்டபடி தாக்குதல்களை நடத்தின என்றும்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## ஒட்டுசுட்டான் பகுதியில் நேற்று பலத்த குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், மார்ச் 22

முல்லைத்தீவில் ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்டு வரும் வான் தாக்குதல்களினால் பொதுமக்களின் உடைமைகள் பலவும் நாசமாகியுள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன

முல்லைத்தீவு பிரதான வீதியில் உள்ள ஒட்டுசுட்டானில் நேற்றும் பொம்மர்கள் கடும் குண்டு வீச்சுக்கள் நடத்தின. கண்மூடித்தனமான குண்டு வீச்சினால் அப்பகுதியில் வீடுகள் சில பலத்த சேதமடைந்தன.

தொடர்ந்து முத்தையன் கட்டுப்பகுதியில் இடம்பெற்ற குண்டு வீச்சிலும் வீடுகள் சில சேதமடைந்தன என்றும் செய்திகள் தெரிவித்தன.

[ஒ-5]

## புலிகளின் நடவடிக்கை உன்னிப்பாகக் கவனிப்பாம்!

### பிரதமர் ராவ் நேற்று தகவல்

புதுடில்லி, மார்ச் 22

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன.

இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் நேற்று புதுடில்லியில் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் அமைதிக்கும் ஒற்றுமைக்கும் ஆபத்து ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வருகின்றனர் என்றும்—

அவர்கள் தொடர்பான நடவடிக்கைகள் பற்றி தமிழ்நாடு முதலமைச்சர் அடிக்கடி புதுடில்லியுடன் தொடர்பு கொண்டு வருகிறார் என்றும் பிரதமர் மேலும் சொன்னார்.

[ஒ-த]

# சிங்கபுரவிலும் சண்டை; ஏழு படையினர் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 22

கிழக்கில், பொலன்னறுவ சிங்கபுர காட்டுப் பகுதியிலும் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்காப் படையினருக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரையும் ஊர்காவல் படையினரையும் கொண்ட படை அணி மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும்—

இந்தச் சண்டையின்போது 5 இராணுவத்தினரும், இருவர் ஊர்காவல் படையினரும் உயிரிழந்தனர் என்றும், மற்றும் இருவர் படுகாயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 45 நிமிட நேரம் சண்டை நீடித்ததாகவும் கூறப்பட்டது.

இராணுவக் கண்காணிப்புப் பிரிவு ஒன்று விடுதலைப் புலிகளை நேர் எதிரே சந்தித்த சமயம் மேற்படி மோதல் மூண்டதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

[ஒ-த-10-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AIKAYES அறிவித்தல்

உற்றார், உறவினர், நண்பர்களுக்கான

## வடபகுதி
## தனியார் உணவு விநியோகம்

எமது 20 - 03 - 1992 திகதியிட்ட பத்திரிகை அறிவித்தல் தொடர்பாக, கீழ்வரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் விநியோகம் நடைபெறுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். மிகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பின்பு அறிவிக்கப்படும்.

தயவு செய்து வெற்றுக்கலன்கள், வெற்றுப் பைகள், அடையாள அட்டை அல்லது அத்தாட்சி சான்றிதழ் ஆகியவற்றுடன், விநியோகத்திற்கான பதிவு விண்ணப்பத்தையும் கொண்டு வரவும்.

அனுப்பி வைக்கப்பட்ட மண்எண்ணெய் கிடைக்காததால் பிறிதொரு திகதியில் விளம்பரப்படுத்தி விநியோகிக்கப்படும்.

| உ. அ. அதிபர் பிரிவு | இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| 1. உடுவில் | பிரதான களஞ்சியம் Aikayes, முத்துக்கிருஷ்ணர் வீதி, (நாகம்ஸ் சினிமா முன் ஒழுங்கை) சுன்னாகம். | 24 - 03 - 92 | 8.00—5.00 |
| 2. தெல்லிப்பழை | ,, ,, ,, | 25 - 03 92 | 8.00—5.00 |
| 3. கோப்பாய் | நாவலர் வித்தியாலயம்- முன்பாக-நாவலடி, கோப்பாய் | 27 - 03 - 92 | 8.00—5.00 |
| 4. சங்கானை | உ. அ. அதிபர் பணிமனை- முன்பாக - பிரதான வீதி, சண்டிலிப்பாய். | 29 - 03 - 92 | 8.00—5.00 |
| 5. சண்டிலிப்பாய் | கிராம சேவையாளர்- அலுவலகம் அருகில், மாகியப்பிட்டி. | 31 - 03 - 92 | 8.00—5.00 |

AIKAYES - JAFFNA,
முத்துக் கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

[சி-1728]


# நினைவஞ்சலி



## அமரர் பொ. குலநாதன்
B.Sc. (Hons.) Dip-in-Ed.
(முன்னாள் பிரதி அதிபர், மகாஜனாக் கல்லூரி)

மலர்வு: **22—07—1934**

உதிர்வு: **28—08—1989**

நிழல் கொடுத்த மரத்தை அறிந்ததார்?
நெடிய தோற்றம் நினைவில் நிலைக்குமே!
அழகு பொழியும் மனத்தை அறிந்ததார்?
அழியா அழகு உயிரில் தளைக்குமே!

'உதயபதி',
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.



செல்வன்
## கு. குலமோகன்
(லெப். றொபேட்)

வீரஜனனம்: **12 — 07 — 1970**

வீரச்சாவு: **22 — 03 — 1991**

அமைதிச் சிறப்பினை
அறிவதெந்நாளடா?
இமை விழிப்பினை
இரசிப்பதெந்நாளடா?
கணித மேன்மையைக்
கதைப்பதெந்நாளடா?
காதில் இரகசியம்
கேட்பதெந்நாளடா?
உலகு முற்றிலும்
உவந்து துதிக்கு முன்,
உண்மை வீரத்தை
உரைக்க நான் போதுமா?

தங்கள் பிரிவால் துயருறும்:
— குடும்பத்தினர்.

(20134)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-04-30 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**உயிரிரசாயனவியலில் உதவி விரிவுரையாளர்/விரிவுரையாளர்**

குறிப்பு:

உயிரிரசாயனவியலில்/உயிர் தொழினுட்பத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சம்பள அளவுத்திட்டம்;

உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/- மாதமொன்றுக்கு [நிலையானது] ஓராண்டுத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் துணைவேந்தர் ரூபா 4,500-10x200 - 6,500/- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத்திட்டத்தில், 4,500/- சம்பளப் படியில் வைப்பார்.

விரிவுரையாளர் (மருத்துவம்):
ரூபா 4,500 - 10x200 - 6,500/- மாதமொன்றுக்கு

(மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் 4,500 ரூபாவுக்கு மேலே இரண்டு படி அதிகமாக அதாவது 4900/- ரூபா சம்பளத்தில் வைக்கப்படுதல் வேண்டும்).

இப்பல்கலைக் கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட/உதவிப் பதிவாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற 23x10 ச. மீ. அளவுடைய கடித உறை அனுப்பப்படல்வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும்/அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-03-21. [சி-1730]


## இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 22
விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் ஞாயிறு தோறும் இடம் பெறும் வாராந்த கருத்தரங்கில் இன்று திரு. டானியல் அன்ரனி ''எனது கலை, இலக்கிய அனுபவங்கள்'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார். இன்று காலை 10 மணிக்கு கோண்டாவிலில் உள்ள கலை, பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இந்தக் கருத்தரங்கு நடைபெறும்.

★ ★ ★

வட இந்து மகளிர் கல்லூரியில் இயங்கும் தொலைக் கல்விப் பிராந்திய நிலையத்தில் கல்வி கற்கும் பயிலுநர் ஆசிரியர்களுக்கான மெய்வல்லுநர் போட்டி இன்று வட இந்து மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக வடமராட்சிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை கலந்து கொள்வார். [உ-'18]

★ ★ ★

சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி மறுமலர்ச்சி சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் முதலாம் ஆண்டு பூர்த்தி விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் [உ-30]

★ ★ ★

யாழ்ப்பாணம் சென்றல் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்கள் அணிகளுக்கிடையிலான வருடாந்த மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு சென்றல் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

★ ★ ★

திரு. வை. க. சிற்றம்பலத்தினால் ஆக்கம் செய்யப்பட்ட ''திருப்பள்ளியெழுச்சி'' உட்பட இரு நூல்கள் இன்று இணுவில் சிவகாமி அம்மன் ஆலய மண்டபத்தில் வைத்து வெளியிட்டு வைக்கப்படவுள்ளன

திரு. பெ. கனகசபாபதி தலைமையில் இவ்விழா நடைபெறும். [உ-68]

## மணலாறில்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
கூறப்பட்டது.

மணலாறில் நடந்து வரும் போரில் படையினருக்குப் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டு வருவதாக செய்தி ஏஜென்சிகள் தகவல் வெளியிட்டன.

மணலாறில் தற்போது மேற்கொள்ளப்படும் தாக்குதல் முன்னெப்போதும் எடுக்கப்படாத தீவிர இராணுவ நடவடிக்கையாகும் என்று ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் குறிப்பிட்டதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

[உ-ஒ-5]

## அன்னை பூபதி நினைவாக இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 22
தியாகச்சுடர் அன்னைபூபதியின் நினைவாக தெல்லிப்பளை வட்டவை — அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் — இன்று அடையாள உண்ணாவிரதம் இடம் பெறும்.

அதைத் தொடர்ந்து மாலை 7 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறும். [ஒ]

## இலங்கைப் பெண் எய்ட்ஸிற்கு பலியானார்!

கொழும்பு, மார்ச் 22
டுபாயில் இருந்து அண்மையில் நாடு திரும்பிய இலங்கை பணிப்பெண் ஒருவர் ''எய்ட்ஸ்'' நோய்க்குப் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விமானத்தில் வந்திறங்கியதும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர் அங்கு மரணமானார். [உ-த]

## வவுனியா..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
வீதித் தடைகளை அகற்றுவதற்காக வெளியேறி வந்த இராணுவ அணி ஒன்றின் மீதே புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். அச்சமயம் அப்பகுதியில் கடும் மோதல் மூண்டது.

இந்த மோதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் லெப்டினன் சுதாகர் [தில்லையம்பலம் திருப்பரமன் — கல்மடு என்ற போராளி வீர மரணமடைந்தார். [ஒ-5]


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### மருத்துவ பீடம்
### இறுதியாண்டு மருத்துவ பீட (மீள்) பரீட்சை - 1-92

மேற் கூறப்பட்ட பரீட்சை 1992-3-30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. முன்னர் அறிவித்த படி 1992 - 3 - 23 இல் ஆரம்பமாகமாட்டாது.

— பதிவாளர்.

[சி-1727]



## ஆத்ம சாந்திக் கிரியைகள்

திருமதி
### வாலாம்பிகை அம்மாள் பஞ்சநதக் குருக்கள்

சென்ற 15-03-1992 ஞாயிற்றுக்கிழமை பொன்னாலையில் சிவபதமடைந்த, காலஞ் சென்ற பிரம்மஸ்ரீ கு. பஞ்சநதக் குருக்கள் (மாவிட்டபுரம்) அவர்களின் அன்பு மனைவியும், எமது தாயாருமான—

திருமதி வாலாம்பிகை அம்மாள் பஞ்சநதக் குருக்கள் (மாவிட்டபுரம்) அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் பொன்னாலையில் நடைபெறும்;-

| | | |
|---|---|---|
| 24-03-92 | செவ்வாய்க்கிழமை | — தசாகம் |
| 25-03-92 | புதன்கிழமை | — ஏகோதிஷ்டம் |
| 26-03-92 | வியாழக்கிழமை | — சபிண்டீகரணம் |
| 27-03-92 | வெள்ளிக்கிழமை | — கிருகயக்ஞம் |

மேற்படி கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

ப. மகேஸ்வர சர்மா,
(கரவெட்டி),
ப. குமாரசாமி சர்மா (யோகானந்தம்).

[20184]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். மாநகரசபைப் பகுதியில்

# குடிதண்ணீர் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்க முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ். மாநகரசபைப் பகுதியில் உள்ள நீர்த்தாங்கிகள் மூலம் குடி தண்ணீர் விநியோகத்தை ஆரம்பிப்பது குறித்து யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரியும், வேலை பகுதியினரும் ஆராய்ந்து வருகிறார்கள்.

யுனிசெப் திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படும்.

தற்போது நிலவும் கடும் வரட்சியின் விளைவாக ஏற்படக்கூடிய குடி தண்ணீர் பற்றாக்குறையை நீக்கும் முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட இருப்பதாக யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்தார்.

நகரில் 5 இடங்களில் அமைந்துள்ள நீர்த்தாங்கிகளில் பவுஸர்களின் உதவியுடன் தண்ணீரை நிரப்பி விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

பரீட்சார்த்த முயற்சியாக நாயன்மார்கட்டில் அமைந்துள்ள நீர்த்தாங்கி ஒன்றில் தண்ணீரை நிரப்பி விநியோகிக்கும் வேலைகள் அடுத்த வாரம் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-5]

## பாடசாலை அபிவிருத்தி குறித்து நாளை முதல் கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 22

பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல்கள் நாளை 23 ஆம் திகதி தொடக்கம் கோட்ட மட்டத்தில் நடைபெற உள்ளன. பிற்பகல் 3-00 மணிக்கு கலந்துரையாடல் ஆரம்பமாகும்.

நாளை 23 ஆம் திகதி மருதனார்மடம் கோட்டத்துக்கான கலந்துரையாடல் இராமநாதன் கல்லூரியிலும்—

நாளை மறுதினம் 24ஆம் திகதி வடமராட்சிக் கோட்டத்துக்கான கலந்துரையாடல் வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் —

25 ஆம் திகதி யாழ். கோட்டத்துக்கான கலந்துரையாடல் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் —

26 ஆம் திகதி தென்மராட்சிக் கோட்டத்துக்கான கலந்துரையாடல் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் —

30 ஆம் திகதி பண்டத்தரிப்புக் கோட்டத்துக்கான கலந்துரையாடல் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் நடைபெறும்.

பாடசாலைகளின் அபிவிருத்தி சம்பந்தமாகவே இக் கலந்துரையாடல்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ]

## ரோந்துப் படகில் ஏற்றி எம்மை பலமாகத் தாக்கினர்

### விடுவிக்கப்பட்ட மீனவர் தகவல்

குருநகர், மார்ச் 22

தமது ரோந்துப் படகில் எங்கள் மூவரையும் ஏற்றிய கடற்படையினர் எங்களைச் சூழ்ந்து நின்று கைகளாலும், கால்களாலும், கயிற்றுமுடிச்சுகளாலும் தாக்கினர்.

கடற்படையினரிடம் பிடிபட்டு மூன்று நாட்களின் பின்னர் குருநகர் திரும்பிய குருநகர் மீனவர்களில் ஒருவரான கபிரியேல் ரஞ்சன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 17 ஆம் திகதி இவரும் மற்றும் இருவரும் மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்ற சமயம் கடற்படையினரிடம் பிடிபட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் காலை இவர்கள் குருநகர் வந்தடைந்தனர்.

கடற்படையினர் தமது வள்ளத்தில் கட்டப்பட்டிருந்த பாய் மரத்தை பிடுங்கி எறிந்து விட்டு தமது வள்ளத்தை தமது ரோந்துப் படகு மூலம் பல மைல் தூரம் இழுத்துச் சென்றனர் என்றும் —

ரோந்துப் படகில் ஏற்றித் தம்மைப் பலமாகத் தாக்கினர் என்றும் —

பின்பு தாம் பாய்மரம் அற்ற நிலையில் பாலைதீவை அடைந்து குருநகர் மீனவர்களின் உதவியுடன் கரை சேர்ந்ததாகவும் அவர் தெரிவித்தார். [இ-51]


# உயர்கலைக் கல்லூரி

ஆனைப்பந்தி.

[பேராதனை பல்கலைக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம்]

பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கான

பதிவு செய்தல்:

**92 / 93 G. A. Q.**

பதிவு செய்வதற்கான முடிவு திகதி:-

**31 - 03 - 1992**

★ பேராதனை பல்கலைக்கழக விண்ணப்பப்படிவங்கள் அனைத்தும் வந்துள்ளன.

★ பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்/பயிலுனர் ஆசிரியர்கள், G. C. E. A/L மூன்று பாடங்களில் சித்தி அடைந்தோர் ஆகியோர் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

★ விண்ணப்பத்துக்கான ஆவணங்கள், அறிவுறுத்தல்களையும் 19 - 03 - 1992 இல் இருந்து இக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

★ முதல் வரும் 100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதிகள் வழங்கப்படும்.

[சி-1677] — பதிவாளர்.


## "ரே"க்கு பாரதரத்னா

இந்திய திரைப்பட உலகின் பிரபல டைரக்டர் சத்தியஜித் ரேக்கு இந்திய அரசு 'பாரத ரத்னா' விருது அளிக்கின்றது.

ஜனாதிபதி வெங்கடராமன் இது தொடர்பான அறிவிப்பைநேற்று வெளியிட்டார்.

இருதயக் கோளாறு காரணமாக கல்கத்தா மருத்துவமனை ஒன்றில் தற்போது திரு. 'ரே' அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். [இ-எ]

## வழக்கு தாக்கல் செய்ய ஒஸி முடிவு

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியில் இருந்து தாம் வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக திரு. ஒஸி அபயகுணசேகரா தெரிவித்தார். [உ-எ]

## பாலைதீவு உற்சவம்

குருநகர், மார்ச் 22

பாலைதீவு அர்ச். அந்தோனியார் ஆலய உற்சவம் இம்முறை நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-51]

### ★ பருத்தித்துறையில்

## உதைபந்தாட்டப் போட்டி விறுவிறுப்பான கட்டத்தில்!

### "உதயன்" கிண்ணத்துக்கு மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 22

"உதயன்" கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும்— ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையேயான— உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி விறுவிறுப்பான கட்டத்தை அடைந்திருக்கிறது.

32 கழக அணிகள் பங்குபற்றிய இச் சுற்றுப்போட்டியில் முதல் சுற்று ஆட்டங்கள் முடிவடைந்து, தற்போது கால் இறுதியாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற ஒரு கால் இறுதி ஆட்டத்தில் திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டுக் கழக அணி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை 3—2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

கடந்த புதனன்று நடைபெற்ற இரண்டாவது கால் இறுதியாட்டத்தில் கலட்டி "ஏ" அணி வல்வை அணியை 2—1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து அரையிறுதிக்குத் தெரிவானது.

இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மூன்றாவது கால் இறுதிப் போட்டியில் வல்வை புளூஸ் அணியும், நவசக்தி "ஏ" அணியும் மோதுகின்றன.

பொம்மர்ஸ் அணிக்கும், சிவானந்தா "ஏ" அணிக்கும் இடையிலான நான்காவது கால் இறுதிப் போட்டி நாளை திங்கட்கிழமை நடைபெறும்.

இந்தச் சுற்றுப் போட்டி ஆட்டங்கள் பருத்தித்துறை திக்கமுனையில் உள்ள ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

"உதயன்" பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவுடன் நடைபெறும் இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களும், பெறுமதிமிக்க பரிசுகளும் வழங்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## இந்தியாவுக்கு வீசா பெற யாழ். வாசிகள் கஷ்டம்!

கொழும்பு, மார்ச் 22

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் இந்தியா செல்வதற்கு வீசா எடுப்பதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

பல கட்டங்களிலும் பணத்தைக் கறந்தே காரியத்தைப் பார்க்க வேண்டியுள்ளது.

வீசா எடுப்பவர்களின் "கியூ" காலை 7-30 மணிக்கே சுமார் ஒரு மைல் நீளம் நீண்டிருக்கும். அதில் முன்னுக்கு இடம் பிடிப்பதானால் வெளித் தரகர்களுக்கு முந்நூறு கொடுக்க வேண்டும்.

கஷ்டப்பட்டு உள்ளே சென்றால், யாழ்ப்பாண வாசிகள் என்று தெரிந்ததும், அதிகாரிகள் "வீசா தருவதற்கு ஆறு மாதங்கள் பொறுக்க வேண்டும்" என்று தவணை விதிக்கிறார்கள்!

எனினும் யாழ்ப்பாணத்தவர்கள் பலரும் முஸ்லிம் தரகர்களுக்கு 5,000 ரூபாவுக்கு மேல் கொடுத்து வீசா பெறுகின்றனர். (அ-72)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 22

உள்ளூராட்சித் திணைக்களம் பிரதேச சபைகளுடன் இணைந்து நடத்தும் உள்ளூராட்சி ஊழியர்களுக்கான கருத்தரங்கு, நாளை 23 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை கிளிநொச்சி உள்ளூராட்சித் திணைக்களத்தில் நடைபெறும். (இ)

## தமிழக அகதி முகாமிலிருந்த குருநகர் பெண் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

அகதியாகச் சென்று தமிழகத்தில் தங்கியிருந்த யாழ். குருநகரைச் சேர்ந்த பெண் ஒருவர் குழந்தை பிரசவத்தின் போது மரணமானார்.

பிரசவ வேதனை ஏற்பட்டவுடன் ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதி உடனடியாகச் செய்து கொடுக்கப்படாததே இவரது மரணத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு கழுகுமலை அகதி முகாமில் தங்கியிருந்த வின்சலோஸ் ராஜினி [வயது 28] என்பவரே இறந்தவர் ஆவர்.

இவர் தங்கியிருந்த முகாம் மருத்துவ வசதியோ அல்லது போக்குவரத்து வசதியோ அற்ற காட்டுப்பகுதியில் அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## புலிகளைத் தடை செய்ய வேண்டுமாம்

### மூப்பனாரும் கோருகிறார்

சென்னை, மார்ச் 22

விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை வரவேற்கத்தக்கது,

— இவ்வாறு காங்கிரஸ் கட்சியின் பழம் பெரும் தலைவரான மூப்பனார் கூறினார்.

மதுரையில் செய்தியாளரிடையே பேசிய அவர், தமிழ்நாட்டிற்குள் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படை உட்புகுந்திருப்பதாக வெளிவந்த தகவல் கவலை அளிப்பதாக உள்ளது என்றும் தெரிவித்தார். [இ-10]

### சுகாதாரம் பேணாத

## உணவு விடுதிகளுக்கு லைசென்ஸ் இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 22

சுகாதாரக் குறைபாடுகளை நிவர்த்திசெய்யாத உணவு விடுதிகள், தேநீர்ச் சாலைகள், பேக்கரிகள் என்பனவற்றுக்கு இந்த ஆண்டுக்கான அனுமதி [லைசென்ஸ்] வழங்கப்படமாட்டாது,

யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இதுபற்றித் தெரிவிக்கப்பட்டது.

உணவு விடுதிகள், குளிர்பானச் சாலைகள் மற்றும் பேக்கரி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக் கலந்துரையாடலில் தற்போது தோன்றியுள்ள வரட்சி நிலையால் பரவக்கூடிய குடல் சம்பந்தமான நோய்களைத் தடுப்பதில் உணவு விடுதிகள், தேநீர்ச் சாலைகள் பேண வேண்டிய சுகாதார நடவடிக்கைகள் பற்றி வற்புறுத்தப்பட்டது. [இ-5]

## அரையிறுதி ஆட்டம்

கன்பரா, மார்ச் 22

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் மற்றுமொரு அரையிறுதி ஆட்டம் இன்று ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெறும்.

இவ் ஆட்டத்தில் இங்கிலாந்தை எதிர்த்து தென்னாபிரிக்கா விளையாடும்.

இறுதியாட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை மெல்போர்னில் நடைபெறும். [த]


வலி வடக்கு ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம்

நடத்தும்

## இலவச ஆங்கில இலக்கண-பேச்சுப் பயிற்சி வகுப்பு

[GRAMMAR & SPOKEN ENGLISH COURSE]

- தேர்ச்சியும், அனுபவமும் பெற்ற ஆங்கில ஆசிரியர்களால் இச் சேவை வழங்கப்படும்.
- வலி-வடக்கில் வாழ் (தற்போது இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வசிப்போரும்) 16-30 வயது எல்லைக்கு உட்பட்ட இரு பாலாரும் சேர்ந்து கொள்ளலாம்.
- 6 மாதத்தைக் கொண்ட (இவ் இலவசப்) பயிற்சி நெறி, தமிழ்ப் புத்தாண்டுடன் ஆரம்பமாகும்.
- வகுப்பு ஆரம்பிக்கும் தினத்தன்று பிரவேசப் பணமாக ரூபா 25/- (மட்டுமே) அறவிடப்படும்.
- இவ் வகுப்பில் சேர விரும்புவோர் 1992-03-31 திகதிக்கு முன் [முழுப் பெயர், பால், பிறந்த திகதி, முகவரி, கல்வித்தகைமை, தொழில், பெற்றோர் இச் சங்க அங்கத்தராகில் அவ்விவரம்] ஆகியன அடங்கிய தம் விண்ணப்பங்களைக் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பவும். பணிமனைத் தபாற் பெட்டியிலும் போடலாம்.

உதவிச் செயலாளர்,
வலி-வடக்கு ஓய்வூதியர்-
நலன்புரிச் சங்கப் பணிமனை,
காசிப்பிள்ளையார் கோவிலடி,
தெல்லிப்பழை.

(20168)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

B- வெங்காய விதைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பிள்ளையார், 251, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [20167]

## மலிவு விற்பனை

1992 ஆம் ஆண்டுக்கான திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர், டயரிகள் மலிவு விலையில் எல்லாப் புத்தக சாலைகளிலும் விற்பனையாகின்றன. அன்பளிப்புச் செய்யும் நிறுவனங்களுக்கு விசேட கழிவுண்டு. திருக்கணிதம், சாவகச்சேரி. [சி–1723]

## மணமகன் தேவை

யாழ். கத்தோலிக்க, லண்டனில் நிரந்தர வசிப்பிடமாகக்கொண்ட, பெற்றோர் தமது அழகான, நற்குணம் உள்ள, 23 வயது நிரம்பிய கம்பியூட்டர் பட்டதாரி மகளுக்கு [பொறியியலாளர், டாக்டர், கணக்காளர், பட்டதாரி மற்றும் நற்பதவியில் உள்ள தகுந்த வரனைத் தேடுகிறார்கள். கிறிஸ்தவர்களும் விரும்பத்தக்கது. பூரண விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். 393, C/o உதயன், யாழ்ப்பாணம். (20180)

யாழ். இந்துப் பெற்றோர் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளராகத் தொழில் புரியும் அழகிய, 27 வயது பட்டதாரி மகளுக்கு பொருத்தமான மணமகனைத் தேடுகிறார்கள். குறிப்பு, ஏனைய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 837, C/o உதயன், யாழ்ப்பாணம். [4545]

## கல்வி

G. C. E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும், குறைந்த புள்ளிகளைப் பெறுபவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களுக்குள் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சண்டிக்குளி. [20181]

## தேவை

சப்ளையர்களும், சிறு பையன்களும் தேவை. [இடம் பெயர்ந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்] ஹோட்டல் றொலெக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (20185)

## இலவச திருமண சேவை

30 வயது, B. Sc. Diploma in Education ஆசிரியருக்கும், 25 வயது, A/L பெண்ணுக்கும் தகுந்த மணமக்கள் தேவை. சகல தரத்திலும் மணமக்கள் உண்டு. தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4537]

---

**PERSONAL NEW SCIENCE CENTRE**
JAFFNA.

**PHYSICS**

*Mr.* ரவீந்திரநாதன்
B. Sc. (Cey.)
Dip. in. Ed.

★ ஆசிரியரது சகல பௌதிகவியல் வகுப்புகளும் இந் நிறுவனத்தில் மட்டும் நடைபெறும்.

[சி–1684]

---

**புதிய வகுப்புகள்**
**Pure & Applied**
சனி, ஞாயிறு
திரு. தவரட்ணசிங்கம்
B Sc. (Hons) Dip. in Ed.
ஆரம்பம்:
**28 - 03 - 1992**
**BOND INSTITUTES,**
58 A, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
[4555]

---

*"Practice Makes one Perfect"*

**O/L - 1992 பரீட்சைக்கான**

கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம்
ஆகிய பாடங்களுக்கான

## பயிற்சிப் பரீட்சைகள்

ஒவ்வொரு மாதத்திலும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் இந் நிறுவனங்களில் எம்மால் நடத்தப்படும்.

**ஆரம்பம் 29-03-1992**

★ Bond Institutes — யாழ்ப்பாணம்
★ Express Institute — இருபாலை
★ Pearl Institute — நீர்வேலி
★ Kugan Institute — ஆவரங்கால்
★ Satha Pons — வடமராட்சி
★ Brilliant — தென்மராட்சி
★ Vinyls — சுன்னாகம்
★ Vinayahar — ஆனைக்கோட்டை
★ Bitsmans — மானிப்பாய்
★ Paarathy — சித்தன்கேணி
★ National Academy — பண்டத்தரிப்பு

மேலதிக விவரங்களுக்கு;
EXAMINATION UNIT,
**BOND INSTITUTES,**
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[4554]

---

# சதுரங்கம் (CHESS)

சதுரங்கப் போட்டிகளில் பங்கு பற்றுவோருக்கும், சதுரங்க விளையாட்டைப் பழக விரும்புவோருக்கும் பயிற்சி கொடுக்கப்படும். ஒரு வகுப்பில் ஐந்து பேர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

காலை 9 — 11 வரை
மாலை 2 — 4 வரை

வை. கணேசலிங்கம்.

161, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.
[4556]

---

# SPECIAL SPOKEN ENGLISH
## குறுகிய கால விசேட பயிற்சி

★ ஆங்கிலம் எழுத - வாசிக்க - பேச ஆரம்ப முதல் நவீன முறையில் இலகுவாக கற்பிக்கப்படும்.
★ தினசரி வகுப்புகள் [2 மாதம்]
★ தொழில் புரிவோருக்கு சனி - ஞாயிறு மாலை வகுப்புகள்.
★ நேர்முகப் பரீட்சை - கேள்வி - பதில் - பயிற்சி அளிக்கப்படும்.
★ முன் அனுபவம் தேவையில்லை.

**TOEFL** கற்பிக்கப்படும்.

நேரில் விண்ணப்பிக்கவும்:

**ஆரம்பம்: 23-03-1992**

**JAFFNA TECHNICAL INSTITUTE**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[றெயில்வே கடவை அருகே - மேல் மாடி]
[20169]

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி சசிகலா பத்மநாதன்**

மலர்வு: **09 — 06 — 1969**
உதிர்வு: **14 — 03 — 1990**

திதி 22—03—1992

பள்ளி சென்று பல கலையும் கற்று வந்தாய்
பண்பினிலே எமையெல்லாம் ஆண்டு வந்தாய்
உன் உயர்வை காண்பதற்காய் காத்திருந்தோம்— இன்று
உன் பிரிவால் வாடுகின்றோம் எங்கு சென்றாய்?

காலமெல்லாம் உன் நினைவில் வாழ்ந்திருப்போம்
கண்ணீரை எம் மனதில் தேக்கி வைப்போம்
நீ சென்ற திசை நோக்கி தினந்தோறும்
தீராத தாகமுடன் தவித்து நிற்போம்.

—குடும்பத்தினர்.

பெரிய பளை,
பளை.
[20181]

---

# தசாக அழைப்பு

அன்புடையீர்!

சென்ற 13-3-92 இல் சிவலோகப் பிராப்தியடைந்த எங்கள் தகப்பனார் சிவஸ்ரீ. க. கனகசபாபதிக் குருக்களின் ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு பின் வரும் கிரியைகள் நடைபெற உள்ளன.

பங்குனி மாதம் 9 ஆம் நாள் **(22-3-92)** ஞாயிறு தசாகம்
பங்குனி மாதம் 10 ஆம் நாள் **(23-3-92)** திங்கள்
ஏகோதிஷ்டம் மாசிகம்
பங்குனி மாதம் 11 ஆம் நாள் **(24-3-92)** செவ்வாய்
சபிண்டீகரணம்
பங்குனி மாதம் 12 ஆம் நாள் **(25-3-92)** புதன்
கிரகயக்ஞம் நவக்கிரகஹோமம்

மேற்படி கிரியைகளில் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்:
க. இரகுநாதக் குருக்கள்,
க. கிருஷ்ணநாத சர்மா.

முரசுமோட்டை,
பரந்தன்.
(20177)

---

# எண்ணெய்க் குளியல்

கிழட்டுத்தன்மையை மாற்றி இளமையோடு வாழ எண்ணெய்க் குளியல் அவசியம். இது கண்களுக்கு ஒளியைத் தருகிறது. தோலை மிருதுவாக்குகிறது. எப்போதும் புத்துணர்ச்சியைத் தருகிறது.




எண்ணெய்க் குளியலுக்கு இதம், கூட்டுவது, எண்ணெயை, அழுக்கை அகற்றுவது, 'மில்க்வைற்' உற்பத்தியான ஒலிவ் ஸ்நானப் பவுடர் ஒரு பைக்கெற் விலை ரூ. 3/- மட்டுமே.

**மில்க்வைற், யாழ்ப்பாணம்.**
[சி–1726]

---

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
**விஸ்வலிங்கம் ரோகினி**

தோற்றம்: **1967—10—22**
மறைவு: **1990—03—15**

திதி: 22 — 03 — 1992

ஈராண்டு சென்றாலும் என்றும் எமது உள்ளத்தில் அணையா தீபமாக மிளிரும் எமது அன்புத் தெய்வமே!
உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தந்தை, தாய்,
சகோதரர்கள், அத்தான்.

வேளாதோப்பு,
கல்வியன்காடு.
[20178]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஐ. நாவின் முடிவின் பின்னால்..

தமிழகத்திலிருந்து திருப்பி அனுப்பப்படும் அகதிகளை, தனது பொறுப்பில் ஏற்றுக் கொண்டு பராமரிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பிரிவு (தூதரகம்) முடிவு செய்திருக்கிறது

மூன்று மாதங்களுக்கு முன்னர், தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு இந்திய அரசும், ஸ்ரீலங்கா அரசும் தமக்குள்ளே முடிவு செய்தன. நடைமுறைப் பிரகாரம் ஐ நா. அகதிகள் தூதரகத்தைக் கலந்தாலோசிக்கவில்லை. இவ் விடயத்தில் ஐ. நாவின் உதவி தேவை இல்லை என்ற தோரணையில் விட்டெறிந்தன.

அகதிகள் தமது சொந்த விருப்பத்தின் பேரில் தாயகம் திரும்புகிறார்கள் என்ற நிலை உறுதிப்படுத்தப்படும் வரை ஈழத் தமிழ் அகதிகள் விவகாரத்தில் தான் தலையிடப் போவதில்லை என்று ஐ. நா. அகதிகள் தூதரகமும் அப்போது கடும்போக்கைக் கடைப்பிடித்தது.

ஏற்கனவே நிர்ப்பந்தத்தின் பேரிலும், ஆசை வார்த்தை கூறி ஏமாற்றப்பட்டும் அனுப்பப்பட்ட அகதிகளுக்கு நேர்ந்த அவலமான அனுபவங்களைக் கேள்வியுற்று, தமிழகத்தில் தங்கியுள்ள அகதிகள் திரும்பி வர மறுப்புத் தெரிவிக்கத் தொடங்கினர்.

இது பெரும் தலையிடியாய் போயிற்றே என்று எண்ணிய இந்திய - ஸ்ரீலங்கா அரசுகள், தாம் ஆரம்பத்தில் உதறித் தள்ளிய ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் காலைப் பிடிக்கத் தொடங்கின.

ஜெனிவா தலைமையகத்தில் இருந்து அதிகாரிகள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் வந்தனர். அகதிகளைச் சந்தித்தனர்.

தமிழ்ப் பகுதிகளில் போர் நடந்து கொண்டிருக்கிறது. அகதிகள் திரும்பி வந்தால் உயிர்ப் பாதுகாப்பு உண்டா என்பது நிச்சயமில்லை. இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியிலேயே ஐ. நா. தனது அகதி முகாம்களை அமைக்க முடிவு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனினும் அகதி முகாம்கள் மீது, அவை உள்ள பகுதிகள் மீது ஸ்ரீலங்கா இராணுவம் தாக்குதல் நடத்தமாட்டாது என்பதற்கு உத்தரவாதம் பெறப்பட்டதா?

தமிழகத்தில் அகதி முகாம்களில் அவலப்பட்டு, அவஸ்தைப்பட்டுத் திரும்பும் தமிழர்கள், மீண்டும் இங்கு அகதிகளாகவே வாழப்போகிறார்கள் அவர்களுக்கு மறுவாழ்வு கிடைக்காதா? புதுவாழ்வின்றி முகாம்களுக்குள்ளே கிடக்கும் தலைவிதி தானா?

தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளை இந்திய அரசு பலவந்தமாகவே திருப்பி அனுப்புகிறது என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகம் இருக்க முடியாது.

இத்தகைய ஒரு பின்னணியில், ஐ. நா. அகதிகள் தூதரகம் அகதிகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடிவு செய்திருப்பதற்கான காரணம் தெரியவில்லை.

மனிதாபிமான மனத்துடன் ஐ. நா. அதிகாரிகள் இந்த முடிவுக்கு வந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. அதற்கும் மேலாக, வேறு வித அழுத்தங்கள், நெருக்குதல்கள் காரணமாக இந்த அவசர முடிவு எடுக்கப்பட்டிருக்குமோ என்ற ஒரு சந்தேகம் பிறக்கிறது!

# மூளையின் சக்தி ஆளுக்கு ஆள் வேறுபாடானதா? ஒரே அளவினதா?

1990 இல் இருந்து 2000 வரையிலான பத்தாண்டுகளை மேலை நாடுகள் 'Decade of the Brain'' (மூளை தசாப்தம்) என்று பிரகடனப்படுத்தி அத்துறையிலான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் ஆனந்த விகடன் வார சஞ்சிகை தனது 19-01-1992 இதழை 'மூளை ஸ்பெஷல்' ஆக வெளியிட்டிருந்தது.

இந்தியாவின் பிரபல நரம்பியல் நிபுணர் டாக்டர் பி. இராமமூர்த்தியின் பேட்டி ஒன்றும் அந்த இதழில் வெளியானது.

மூளை பற்றி சிந்திக்கத் தூண்டும் கருத்துக்களை டாக்டர் இராமமூர்த்தி அப் பேட்டியில் தெரிவித்திருக்கின்றார்.

அப்பேட்டியை இங்கு தருகின்றோம்.

## உணவு வகைகள் அதன் மீது செல்வாக்குப் பிரயோகிக்க முடியாது

டாக்டர் இராமமூர்த்தி: மனித மூளை பல எல்லைகளைக் கடந்து விட்டது. தொடர்ச்சியான ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள் போன்றவை மனித இனத்தின் பல மர்மங்களை, புதிர்களை இன்று விடுவித்துக் கொண்டிருக்கின்றன.

இப்படி 'மூளை'யை வைத்துப் பல முன்னேற்றங்களை மனிதன் எட்டி வருகிறான் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் தான் இந்த பத்தாண்டுகளும் 'மூளை யுக'மாக அறிவிக்கப் பட்டிருக்க வேண்டும்.

கேள்வி: உபயோகமாகச் செலவழிக்க மூளையைத் தயார் செய்ய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் ......?

டாக்டர்:

நமது முன்னோர் காலத்தைக் கொஞ்சம் எட்டிப் பார்த்துக் கடைப்பிடிக்க வேண்டும். அதாவது...... ஐயாயிரம், ஆறாயிரம் வருடங்களுக்கு முன்பு நம் முன்னோர் செய்து வந்த யோகப் பயிற்சிகளை விடாமல் செய்து வந்தால் போதும்...... மூளை சுறுசுறுப்பாகும். திறமை பெருகும் ... மனம் சமநிலையில் இருக்கும். இதனை நம் மூதாதையர்கள் சுலோக வடிவிலேயே எழுதி வைத்து விட்டும் போயிருக்கிறார்கள்.

பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு இப்போது தான் யோகாசனங்கள் பற்றிய விழிப்பு உணர்வு பரவி வருகிறது. இது இந்த நூற்றாண்டின் நன்மை.

### மூளை உலகின் இன்றைய நிலை

கேள்வி: மூளை உலகின் இன்றைய பொதுவான நிலை என்ன?

டாக்டர்: எக்கச்சக்கமான முன்னேற்றம்! மனித மூளை உபயோகிக்கப்படும் விதத்தை ஆராய ... ''கெமிஸ்டுகளும்'' ''பயோ கெமிஸ்டுகளும்'', கம்பியூட்டர் தொடர்புடையவர்களும், கணித மேதைகளும், மனிதவியல் வல்லுநர்களும், உடற் கூறு இயல் அறிஞர்களும் ஏகமாய்ப் பெருகி வருகிறார்கள். கடந்த இருபது ஆண்டுகளில் இது போன்ற ஆராய்ச்சி ஆயிரம் மடங்கு அதிகரித்துள்ளது.

இன்னும் சொல்லப் போனால் விண்வெளி ஆராய்ச்சிக்கு அடுத்த படியாக அதிக பட்ச விஞ்ஞானிகள் ஈடுபட்டிருப்பது மூளை ஆராய்ச்சியில் தான். அதனால்தான் ''மூளை'' யை உள்ளுக்குள் இருக்கும் பிரபஞ்சம் (Internal Universe) என்று செல்லமாக அழைக்கின்றோம். இப்படிப்பட்ட ஆராய்ச்சி முடிவுகள் மருத்துவ உலகின் சிகிச்சை முறைகளுக்கு மிகவும் உதவியாய் இருக்கின்றன.

கேள்வி: மூளை மாற்று சத்திர சிகிச்சை எப்போது சாத்தியமாகும்?

டாக்டர்: மாற்றி வைத்தால் உடனே மூளை பொருந்திப்போய் இயங்குவதற்கு சிறுநீரகம் மாதிரியில்லை. மாற்று மூளையைப் பொருத்தி விடுவது சுலபம். ஆனால், அந்த நரம்புகளை சுரக்கச் (Stimulate) செய்து இயங்க வைக்கும் வித்தையைத் தான் மனிதனால் அறிய முடியவில்லை.

குறைந்த பட்சம் ஐம்பது ஆண்டுகளுக்கு அதை அறிவது சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது. ஆனால் உலக நாடுகளில் இது குறித்தான ஆராய்ச்சிகள் நடைபெறாத இடமே இல்லை.

ஒரு மூளையின் திசுக்களை மாற்று மூளையில் செலுத்தி, அந்த நரம்புகளை முடுக்கி இயக்க வைக்கும் முயற்சி சென்னை தரமணியில் உள்ள மருத்துவ அறிவியல் கழகத்திலும் நடக்கிறது.

### வெண்டைக்காயும் கணிதத் திறமையும்

கேள்வி: வெண்டைக்காய் சாப்பிட்டால் கணிதத்திறமை விருத்தியாகுமா?

டாக்டர்: இல்லை ... நாம் அன்றாடம் உட்கொள்ளும் உணவு வகைகள் எதுவுமே நமது மூளை மீது செல்வாக்குப் (Influence) பாவிக்க முடியாது. ஆனால், சத்தற்ற உணவு வகைகளை குழந்தைகளோ, கர்ப்பிணிகளோ சாப்பிட்டால், அது நிச்சயம் மூளை வளர்ச்சியைப் பாதிக்கும். சத்துக் குறைவான உணவு வகைகளை தாயோ, குழந்தையோ உட்கொண்டதன் விளைவுதான் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள்.

சத்துணவுக் குறைச்சலால் மூளை பாதிக்கப்படுவதெல்லாம் படுவேகமாக நடப்பது குழந்தையின் முதல் 18 மாதங்களில் தான். அந்தக் காலத்துக்குள் சத்துணவை தொடர்ந்து அளித்து வந்தால் போதும்... மூளை வளர்ச்சி குன்றுவதை நாம் முழுதாகத் தடுத்து விடலாம்.

நமக்கு இந்த வெண்டைக்காய் விஷயம் மாதிரி, சில வெளிநாட்டவர்களுக்கு குரங்கு மூளையைச் சாப்பிட்டால் மூளை விருத்தியாகும் என்று நம்பிக்கை இருக்கிறது ஆனால், இவற்றுக்கு விஞ்ஞானபூர்வ சான்று தான் இல்லை.

கேள்வி: இரட்டை மண்டை இருந்தால் உள்ளுக்குள் மூளை ரொம்ப (ஸ்ட்ராங்) பலம் ... அவர் புத்திசாலி என்றெல்லாம் சொல்கிறார்களே?

டாக்டர்: மூளையினுடைய அளவை வைத்து அதை பலமானது... ... பலவீனமானது என்று சொல்லவே முடியாது. அப்படிப் பார்த்தால் பழங் கால வானொலிப் பெட்டிகள் பெரிய அளவில் இருக்கும். இக்கால ட்ரான்ஸிஸ்டர்கள் சின்ன அளவில் வந்து விட்டன. இதில் எது சக்தியானது, பவர்ஃபுல், என்று போட்டி வைப்பது அபத்தமில்லையா?

கேள்வி: மூளையில் கொலம்பஸ் மூளை, ஐன்ஸ்டீன் மூளை மாதிரியான அதிமேதாவி மூளைகள் இயற்கையிலேயே அமைவது தானா?

டாக்டர்: இயல்பிலேயே அவரவர் துறைக்கான அடிப்படை அறிவும் விருப்பமும் மூளையில் நிச்சயம் உண்டு. இப்படி மரபு வழியாக (Jenetical) வருவது கொஞ்சம் என்றாலும், படிப்பு, சுற்றுப்புறச் சூழல், வளரும் விதம் போன்றவைதான் ஒரு மேதாவியை (ஜீனியஸை) உருவாக்குகின்றன.

கேள்வி: பெண் புத்தி பின் புத்தியா?

டாக்டர்: இதெல்லாம் சுத்தக் கட்டுக்கதை. ஆண் ஆதிக்க வர்க்கம் தன் வசதிக்காக ஏற்படுத்திக் கொண்டவை. ஆண்டாண்டு காலமாக ஆண்களே ஆண்டு வந்ததன் பலன் ஒன்றும் பெரிதாக இல்லையே? யுத்தங்களும் அழிவுகளும் தானே மிச்சம்!

கேள்வி: பெண் நரம்பியல் நிபுணர்கள் அதிகமாகி வருகின்றார்களா?

டாக்டர்: அப்படிச் சொல்ல முடியவில்லை. உலகம் முழுவதும் 12 ஆயிரம் நரம்பியல் டாக்டர்கள் இருக்கின்றோம் என்றால், அதில் பெண்கள் 30 பேருக்குள் தான் இருப்பார்கள். அவர்களிலும் அநேகர் ஜப்பான், சீனா, ரஷ்யா போன்ற நாடுகளைச் சார்ந்தவர்கள். ★

# தாயகம் திரும்பும் அகதிகளுக்கு பாதுகாப்பில்லை என்பதே உண்மை

## ஆனால் ஐ. நா. மனிதாபிமானத்துடன் பார்க்கிறது

கொழும்பு, மார்ச் 22

இலங்கையில் அகதிகள் பாதுகாப்பாக வாழ முடியாத நிலை இருப்பதாகவே ஐ. நா. அகதிகள் தூதரகம் கருதுகிறது. ஆனால் ஆயிரக்கணக்கான அகதிகள் திரும்பிக் கொண்டிருப்பதால் மனிதாபிமான ரீதியில் இதனைக் கருத்தில் கொள்ள வேண்டிய நிலை அதற்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கொழும்பில் உள்ள பி.பி.ஸியின் செய்தி முகவர் கிறிஸ்தோபர் மொறிஸ், தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகள் பற்றிய தமது கண்ணோட்டம் ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

இம்மாதம் 19 ஆம் திகதி அன்று இருந்த நிலையை அடிப்படையாக வைத்து அவரது கண்ணோட்டத்தில் பின்வரும் தகவல்கள் தெரிவிக்கப் பட்டிருந்தன:

★ கடந்த 2 மாதங்களில் மட்டும் 10 ஆயிரம் அகதிகள் தமிழகத்திலிருந்து இலங்கை திரும்பியுள்ளனர். இலங்கை அரசும், இந்திய அரசும் அகதிகளின் மறு வாழ்வுத் திட்டத்தில் ஐ. நா. அகதிகள் தூதரகம் பங்கேற்பதை விரும்புகின்றன.

★ ஆனால் ஐ. நா. அகதிகள் அமைப்புக்கு தென்னிந்தியாவில் அலுவலகம் இல்லை. புதுடில்லியில் உள்ளது. ஆனால் அதுவும் ஆப்கானிஸ்தான் அகதிகளைப் பற்றி மட்டுமே கவனித்து வருகிறது.

★ ஐ. நா. அகதிகள் அமைப்பின் சட்ட விதிப்படி அகதிகள் தாமாக விரும்பிச் சென்றார்களா என்பதை அறிந்த பின்பே மறு வாழ்வுப் பணிகளில் ஈடுபட முடியும் என்று ஐ நா. அகதிகள் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

★ தமிழ்ப் பகுதிகளில் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்குமிடையே இன்னமும் போர் நடந்து கொண்டிருக்கிறது. தாயகம் திரும்பிய அகதிகளில் காலவாசிப் பேர் இன்னமும் அகதி முகாம்களில் தான் வாழ வேண்டியுள்ளது. அவர்கள் தங்கள் சொந்த ஊருக்குச் செல்ல முடியவில்லை.

★ இப்போது புலிகளுக்கு அரசும் மடு முகாமுக்கு சில மைல்கள் வடக்கே பாலம்பிட்டி என்ற இடத்தில் அகதி முகாம் அமைக்கலாம் என ஒத்த கருத்தைக் கொண்டுள்ளன. இந்தப் பகுதி அரசின் கட்டுப்பாட்டில் இல்லை.

★ இருப்பினும் அந்த இடம் இரு தரப்புக்கும் பொதுவான இடமாக ஐ. நா. அகதிகள் அமைப்பு கருதுகிறது அப்போது தான் அகதிகளின் பாதுகாப்புக் குறித்து. ஓரளவுக்காவது உறுதி மொழி கிடைக்கும் என ஐ. நா. அகதிகள் அமைப்பு கூறியுள்ளது இலங்கை அரசு இதனை ஏற்றுக் கொண்டுள்ளது.

### சிங்கள..

[1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் தமிழ் நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டியது எமது கடமை'' என்று குறிப்பிட்டார். [ஒ-10]

### தேயிலைக்குத் தண்ணீர்!

கொழும்பு, மார்ச் 22

கடும் வரட்சியால் தென்னிலங்கையில் காலத்தைப் பகுதியில் உள்ள தேயிலை, இறப்பர் தோட்டங்களில் திடீர் திடீரென தீப்பற்றி எரிவது சகஜமாகிவிட்டது.

இதேவேளை கடும் வரட்சியால் கருகி நாசமாகி வரும் தேயிலைக் கன்றுகளைப் பாதுகாக்க இரவு பகல் என்று பாராது தொழிலாளர்கள் நீர் பாய்ச்சி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் வரட்சியைப் பயன்படுத்தி விஷமிகள் தேயிலை, இறப்பர் தோட்டங்களுக்குத் தீவைத்து வரும் சம்பவங்களும் அதிகரித்துள்ளனவாம். [அ-122-5]

### உடனடி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ தற்போது சமர்ப்பிக்கப் பட்டுள்ள யோசனைகளை ஆராய்ந்து விரைவில் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று அரசையும் தமிழ்த் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறோம். [அ-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்றல் - சென்ஜோன்ஸ் கிரிக்கெட்: வெற்றி தோல்வியின்றி நேற்று முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணம் மத்திய [சென்றல்] கல்லூரி அணிக்கும், யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்ற வடக்கின் மிகப்பெரும் கிரிக்கெட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. எனினும் யாழ்ப்பாணம் சென்றல் அணி சிறந்த அணி என்பதை இந்த ஆட்டத்தில் நிரூபித்தது.

ஆட்டத்தில் முதல் நாள் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 344 ஓட்டங்களைப் பெற்றது என்பது தெரிந்ததே.

சென் ஜோன்ஸ் அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 33 ஓட்டங்கள் என்ற நிலையில் நேற்றுக்காலை தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை தொடங்கியது. மதிய போசனம் முடிவுற்று ஒரு மணி நேரத்துக்குப் பின்னர் 226 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அவ்வணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

எம். துஷாரா—27, பி. ரி. கெர்ஷன்—18, அணித் தலைவர் எம். காண்டீபன்—76, கே. பிரதீபன்—38, ஜி. சிறிதரன்—18 ஓட்டங்களைப் பெற்றனர்.

சென்றல் அணித் தலைவர் கே. பிரபாகரன் 83 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், எஸ். லக்ஷ்மிகரன் 20.3 ஓவர்கள் பந்துவீசி 34 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

போதிய ஓட்டங்கள் பெறாததால் தொடர்ந்து துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட சென் ஜோன்ஸ் அணி, நேற்று ஆட்டம் முடிவடைந்த போது இரண்டாவது இன்னிங்ஸில் எட்டு விக்கெட் இழப்புக்கு 133 ஓட்டங்களைப் பெற்றது.

ரி. பீஷ்மன் 16, என். சுஜித்குமார் 45, பி. ரி. கெர்ஷன் 37 ஓட்டங்களைப் பெற்றனர்.

கே. பிரபாகரன் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், எஸ். லக்ஷ்மிகரன் 43 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

'ஆட்டத்தின் நாயகன்' மற்றும் 'சிறந்த பந்து வீச்சாளர்' ஆகிய பரிசுகளை சென்றல் வீரர் எஸ். லக்ஷ்மிகரன் தட்டிச் சென்றார்.

சிறந்த பல்துறை வல்லுநருக்கான பரிசு சென். ஜோன்ஸ் அணித் தலைவர் எம். காண்டீபனுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த துடுப்பாட்ட வீரராக 143 ஓட்டங்களைப் பெற்ற சென்றல வீரர் சு. ரகுதாஸும்—

சிறந்த பந்து தடுப்பாளராக சென்றல் அணி விக்கெட்காப்பாளர் ஏ. சுரேஷும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேற்படி 88 ஆவது வருடாந்த ''வடக்கின் மிகப் பெரும்'' கிரிக்கெட் போட்டிக்கு திரு எம். வேதாபரணமும் திரு. ஆர். செல்வராஜாவும் மத்தியஸ்தம் வகித்தனர்.

[உ-20]

# பொன் அணிகள் போரும் வெற்றி தோல்வியின்றி முடிவு

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் இடையிலான 75 ஆவது வருடாந்த ''பொன் அணிகள் போர்'' கிரிக்கெட் போட்டி நேற்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் இந்த ஆட்டம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 226 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

ஆரம்ப துடுப்பாட்டக்காரராக களத்தில் நுழைந்த சென் பற்றிக்ஸ் வீரர் என். அஜந்த் தேவராஜா கடைசி ஆட்டக்காரராக — ஆட்டமிழக்காமல் 95 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் — பவிலியனுக்குத் திரும்பினார். அவருடன் சோடி சேர்ந்து ஆடிய பி. பாலக்குமார் 35 ஓட்டங்களைப் பெற்றார்.

யாழ்ப்பாணக் கல்லூரி அணித் தலைவர் ரி. வீரசுதன் 54 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

யாழ்ப்பாணக் கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் 186 ஓட்டங்களைப் பெற்றது. ரி. வீரசுதன், கே. வரப்பிரதன் ஆகியோர் தலா 43 ஓட்டங்களைப்பெற்றனர்.

பந்து வீச்சில் பற்றிக்ஸ் வீரர் பி. எரிக் நிர்மலன் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், என். ஆர் மகேந்திரராஜா 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 5 விக்கெட் இழப்புக்கு 43 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

யாழ்ப்பாணக் கல்லூரி அணி வீரர் எஸ். அஜித் திறமையாகப் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்

அடுத்த ஆட்ட முடிவுவரை 4 ஓவர்கள் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 26 ஓட்டங்களைப் பெற்றது.

ஆட்டத்தின் சிறப்பு வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் வருமாறு:-

★ துடுப்பாட்ட வீரர்;- என். அஜந்த் தேவராஜா [சென் பற்றிக்ஸ்]

★ பந்து வீச்சாளர்:- ரி. வீரசுதன் [யாழ்ப்பாணக் கல்லூரி]

★ பந்து தடுப்பாளர்:- எஸ். நிஷாந்தன் [சென் பற்றிக்ஸ்]

★ பல்துறை வல்லுநர்:- ரி. வீரசுதன் யாழ்ப்பாணக் கல்லூரி]

★ ஆட்டத்தின் நாயகன்:- என். அஜந்த் தேவராஜா [சென் பற்றிக்ஸ்]

★ சிறந்த ஜோடி துடுப்பாட்ட வீரர்கள் என். அஜந்த் தேவராஜா, பி. பாலகுமார் [சென் பற்றிக்ஸ்].

இந்த ஆட்டத்துக்கு திரு. பி. முருகவேள், திரு. எஸ். சுசீந்திரலிங்கம் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

[உ-20]

## சாதனை படைத்து வந்த

# நியூஸிலாந்து அணி "அவுட்"! உலகக்கிண்ண கிரிக்கெட்டில்

ஒக்லாந்து, மார்ச் 22

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் தொடர்ந்து வெற்றிக்கு மேல் வெற்றி படைத்து வந்த நியூஸிலாந்து அணி நேற்று அரையிறுதி ஆட்டத்தில் தோல்வியுற்றதினால் இறுதியாட்டத்தில் விளையாடும் சந்தர்ப்பத்தைக் கோட்டை விட்டது.

நேற்று கிறைஸ்ட் சேர்ச்சில் நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி பாகிஸ்தான் அணியிடம் 4 விக்கெட்டுகளினால் தோல்வியுற்றது.

உலகக் கிண்ண கிரிக்கெட்டின் முதற்சுற்றில் எட்டு ஆட்டங்களில் ஏழில் நியூஸிலாந்து அணி வெற்றியீட்டி முன்னணியில் திகழ்ந்தது என்பதும்—

பாகிஸ்தானுக்கு எதிரான ஒரேயொரு ஆட்டத்தில் மற்றும் அந்த அணி தோல்வியடைந்திருந்தது என்பதும் தெரிந்தவையே.

நேற்று மீண்டும் அரையிறுதி ஆட்டத்தில் கடும் போட்டியின் பின்னர் பாகிஸ்தானிடம் நியூஸிலாந்து அணி தோற்றுப் போனது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 262 ஓட்டங்கள் எடுத்தது.

அணித்தலைவர் மார்ட்டின் குரோ 91 ஓட்டங்களையும் கென் ரதர்வோர்ட் 50 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பதிலளித்து ஆடிய பாகிஸ்தான் அணி மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் 48.5 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 264 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது

ஆட்டத்தின் ஒரு கட்டத்தில் 35 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 140 ஓட்டங்களை மட்டும் பெற்று பாகிஸ்தான் அணி மிகவும் இக்கட்டான நிலையில் இருந்தது.

ஆனால் ஐந்தாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்த்து ஆடிய மியான்டாட்டும், இன்சமாமுல்ஹக்கும் 87 ஓட்டங்களைப் பெற்று அணியின் எண்ணிக்கையை 227 ஆக உயர்த்தினர்.

இன்சமாமுல் ஹக் மிகச் சிறப்பாக ஆடி 47 பந்துகளில் 60 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். மியான்டாட் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களைப் பெற்றார்.

இரண்டு ஓவர்கள் மீதம் இருக்கையில் பாக். அணியின் வெற்றிக்கு 12 ஓட்டங்கள் மட்டும் இருந்த போது போட்டி மிகவும் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது.

49 ஆவது ஓவரில் பாகிஸ்தான் வீரரான மொயின் அடுத்தடுத்து எடுத்த ஓட்டங்கள் பாகிஸ்தானுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்தது.

ஆட்டத்தின் சிறந்த வீரராக இன்சமாமுல்ஹக் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வெற்றி மூலம் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் விளையாட பாகிஸ்தான் முதன் முறையாகத் தகுதி பெறுகிறது.

# பஞ்சாபில் வன்முறை திடீரென அதிகரிப்பு

பஞ்சாப்பில் அமட்சார் நகரின் சந்தைக்குள் நேற்றுப் புகுந்த இரு சீக்கியத் தீவிரவாதிகள் அங்கு கண்மூடித்தனமாகச் சுட்டதில் 13 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர்.

பஞ்சாப் மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் அரசு பதவியேற்றபின் இடம்பெற்ற மூன்றாவது பெரிய கொலைச் சம்பவம் இதுவாகும். அங்கு தீவிரவாத வன்முறைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[உ-10]

# தாய்லாந்தில் தேர்தல்

தாய்லாந்தில் இன்று ஞாயிறு பொதுத் தேர்தல் நடைபெறுகிறது.

1932 ஆம் ஆண்டு முடியாட்சி நீக்கப்பட்டு நாடாளுமன்ற முறை ஏற்படுத்தப்பட்ட பின் அங்கு நடைபெ...

# தெற்கில் பாதயாத்திரைக்கு பெருகிவரும் ஆதரவு!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் எட்டுக் கட்சிகள் நடத்திவரும் பாதயாத்திரைக்கு தென்னிலங்கை மக்கள் பெருமளவு ஆதரவு தெரிவித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதயாத்திரையில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் சேர்ந்து கொள்வதாகவும் அறிவிக்கப்படுகிறது.

பாத யாத்திரை நேற்றுக் காலியைச் சென்றடைந்தது.

பாதயாத்திரைக்கு பொது மக்களின் ஆதரவு பெருகி வருவது கண்டு அரசாங்க வட்டாரங்களுக்கு கிலேசம் ஏற்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பாதயாத்திரை பெரும் வெற்றியடைந்துள்ளதாக அனுரா பண்டாரநாயக்காவும் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அமுதாம்பிகை சோமசுந்தரசர்மா

திருமதி அமுதாம்பிகை சோமசுந்தரசர்மா 21-3-92 அன்று காலமாகி விட்டார். இவர் சோமசுந்தரசர்மாவின் அன்பு மனைவியும், ஜெகதீஸ்வரி, ரவிச்சந்திரன், ஜெயராமசர்மா, தீபதர்சனன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சோ. ரவிச்சந்திரன்.
(மகன்)

கல்லாக் கட்டுவன்,
சிவ பூதவராயர் கோவில்,
சுன்னாகம்.

[20179]

## கனகலிங்கம் பொன்னுத்துரை

[உரிமையாளர், மல்லிகா எஸ்ரேட், பகாவ், மலேசியா]

கனகலிங்கம் பொன்னுத்துரை 15-3-92இல் காலமானார். இவர் கொக்குவில் மேற்கு அமரர்கள் இ. கனகலிங்கம் - சிவபாக்கியம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், சரஸ்வதி [மல்லிகா எஸ்ரேட்] அவர்களின் அன்புக் கணவரும், கொக்குவில் மேற்கு யோகாம்பாள், யோகலட்சுமி, யோகேஸ்வரி [பகாவ்], யோகாம்பிகை [கோலாலம்பூர்], பாக்கியம் [சிறம்பான்], செல்வராணி [பகாவ்], மல்லிகா [கோலாலம்பூர்], விக்னேஸ்வரி [கோலாலம்பூர்], அமரர் விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், கொக்குவில் மேற்கு நா. நடராசா, வ. சிவசுப்பிரமணியம், அமரர் K. G. நாதன், S. பாலசுப்பிரமணியம் [கோலாலம்பூர்], கமலநாதன் [சிறம்பான்], சிவா [பகாவ்], V. ஜெயரட்ணம் [கோலாலம்பூர்], பொ. குகன் [கோலாலம்பூர்] ஆகியோரின் மாமனாரும், கொக்குவில் மேற்கு செல்லையா மனோன்மணியின் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் மல்லிகா எஸ்ரேட்டில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
நா. நடராஜா

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[20186]

## திருமதி பாக்கியம் சோமசுந்தரம்

திருமதி பாக்கியம் சோமசுந்தரம் அவர்கள் நேற்று [21-3-92] காலமானார்.

அன்னார் திருநெல்வேலி கோணாமலை ஒழுங்கையைச் சேர்ந்த காலஞ்சென்ற வே. சோமசுந்தரத்தின் பாரியாரும், சொக்கலிங்கம் [Area Manager C.T.B. கோண்டாவில்] அவர்களின் அருமைத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி ச. சொக்கலிங்கம்

315, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி.

[20187]

## ஆறுமுகம் கனகம்மா

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், கொக்குவில் சந்தி கே. கே. எஸ். றோட், இல. 73இல் வசித்தவருமாகிய ஆறுமுகம் கனகம்மா நேற்று 21-3-92 காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற நடராசா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற அம்பலவாணர் - செங்கமலம் தம்பதிகளின் அன்பு மருமகளும், அன்னம்மா, மரகதம், இரத்தினம், இரஞ்சிதம், முத்துலெட்சுமி, கனகலிங்கம் [சந்திரபவான், கிளிநொச்சி] ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கதிரவேலு, குழந்தைவேலு, சொக்கலிங்கம் [மல்லாவி], காலஞ்சென்ற இராசலிங்கம், அன்னலிங்கம், கோணேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், கமலாதேவி, புனிதாதேவி, ஜெகதேவி, கலைச்செல்வி, சிவலிங்கம் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கனகசபாபதி, சண்முகநாதன், பரமசிவம் [நோர்வே], ஜெயரெத்தினம், குணமணி ஆகியோரின் மாமியாருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
அ. ஆறுமுகம் [கணவர்]

[20188]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் ( பிறைவேட் ) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22-3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org